005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)-

2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 06

**STU6410–கட்டிளமைப்பருவத்தினருக்கான உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 21.12.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ஒரு ஆசிரியர் கட்டிளமைப்பருவம் பற்றி கற்பதன் முக்கியத்துவத்தினை **இரண்டு** (02) காரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.
2. சூழல் பற்றிய கற்றல் நோக்குகளுக்கு அமைவாக கட்டிளமைப்பருவத்தினரின் விருத்தி எவ்வாறு இடம்பெறுகிறது என **இரண்டு (02)** உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
3. கட்டிளமைப்பருவம் ஒரு “அழுத்தம் நிறைந்த” அல்லது “இடர்மிகுந்த” பருவம் என ஏன் கருதப்படுகின்றது, **இரண்டு (02)** உதாரணங்களைக் குறிப்பிட்டு கலந்துரையாடுக.
4. உடலியல் மாற்றத்தின் காரணமாக கட்டிளைஞர்கள் முகங்கொடுக்கும் **இரண்டு (02)** பிரச்சினைகள் பற்றி விளக்குக.
5. பிள்ளைகளுக்கும் கட்டிளைஞர்களுக்கும் இடையில் சிந்தனை செயன்முறையில் காணப்படும் **மூன்று** (03) வேறுபாடுகளை குறிப்பிடுக.
6. கட்டிளைஞர்களது தன்முனைப்புச் சிந்தனையின் பண்புகள் **இரண்டு** (02) பற்றிச் சுருக்கமாக விளக்குக.
7. கட்டிளைஞர்களின் சமூக விருத்தியில் பெற்றோர்களின் வகிபாகம் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என **இரண்டு** (02) உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக.
8. கட்டிளைஞர்களிடத்தில் பொதுவாகக் காணப்படும் ஆளுமை ஒழுங்கீனங்கள் **இரண்டு** (02) பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **அ.** கட்டிளமைப் பருவத்தினரின் உடலியல் மாற்றங்கள் மூன்று கட்டங்களுக்கூடாக இடம்பெறுகின்றன என உளவியலாளர்கள் கருதுகின்றனர். அந்த **மூன்று** (03) கட்டங்களையும் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

**ஆ.** மேலே பகுதி I இல் குறிப்பிட்டவைகளில் ஒரு கட்டத்தினை தெரிவு செய்து, அக்கட்டத்தில் உடலியல் மாற்றங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன எனச் சுருக்கமாக விளக்குக.

**(07 புள்ளிகள்)**

இ. கட்டிளைஞர்கள் உடலியல் மாற்றங்களுடன் பொருத்தப்பாடு அடைவதில் ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் உங்களுடைய வகிபாகத்தினை **மூன்று** (03) உதாரணங்களைக் குறிப்பிட்டு பரிசீலிக்குக.
**(10 புள்ளிகள்)**

10. ஸ்டேர்ன்பேர்க் 1988 (Sternberg) குறிப்பிட்டுள்ளதன்படி மத்திய கட்டிளமைப்பருவத்தினரிடத்தில் பகுப்பாய்வு நுண்மதி, ஆக்கரீதியான நுண்மதி மற்றும் செயன்முறை நுண்மதி ஆகிய மூன்று நுண்மதி வடிவங்களை காண முடியும்

அ. மேலே குறிப்பிட்டவற்றுள் ஒரு நுண்மதி வகையினை தெரிவு செய்து அதன் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.
**(04 புள்ளிகள்)**

ஆ. நீங்கள் தெரிவு செய்த நுண்மதியை (பகுதி I) கட்டிளைஞர்கள் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை **இரண்டு** (02) உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
**(06 புள்ளிகள்)**

இ. நீங்கள் கற்பிக்கும் பாடமொன்றினை அடிப்படையாகக் கொண்டு ஒரு பாடத்தலைப்பினை தெரிவு செய்து அதனை கற்பிக்கும் போது, கட்டிளமைப் பருவத்தினரின் அறிகை விருத்திக்கு எவ்வாறு வசதி செய்வீர்கள் என கலந்துரையாடுக.
**(10 புள்ளிகள்)**

11. அ. கட்டிளைஞர்களின் சமூக விருத்தியின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக.
**(04 புள்ளிகள்)**

ஆ. கட்டிளைஞர்களின் சமூகமயமாக்கல் செயன்முறையில் சகபாடிக் குழுக்களின் வகிபாகத்தினை, **இரண்டு** (02) உதாரணங்களைக் குறிப்பிட்டு பரிசீலிக்குக.
**(06 புள்ளிகள்)**

இ. கட்டிளமைப்பருவ மாணவர்களின் சமூக விருத்திக்கு ஒரு நாடகமும் அரங்கியலும் அல்லது விஞ்ஞான ஆசிரியர் என்ற வகையில், சகபாடிகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) உபாயங்களை விளக்குக.
**(10 புள்ளிகள்)**

12. அ. கட்டிளைஞர்கள் ஒரு சமநிலையான ஆளுமையை பேணுவதன் முக்கியத்துவத்தினை **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விளக்குக.
**(04 புள்ளிகள்)**

ஆ. கட்டிளைஞர்களின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் **மூன்று** (03) பற்றி விளக்குக.
**(06 புள்ளிகள்)**

இ. "கட்டிளைஞர்கள் அடையாள துலக்கம் மற்றும் அடையாள குழப்பம் ஆகியவற்றுக்கிடையில் முரண்பாடுகளை அனுபவிப்பர்". எரிக்சன் முன்வைத்துள்ள உளச்சமூக அணுகுமுறைக்கு ஏற்ப இக்கூற்றினைப் பரிசீலிக்குக.
**(10 புள்ளிகள்)**

13. அ. கட்டிளைஞர்களிடத்தில் காணப்படும் பொதுவான **மூன்று (03)** ஆர்வங்களைக் குறிப்பிடுக.
**(03 புள்ளிகள்)**

ஆ. கட்டிளைஞர்களின் ஆளுமை விருத்தியில் அத்தகைய ஆர்வங்கள் எவ்வாறு முக்கியமான வகிபங்கினை வகிக்கின்றது எனக் கலந்துரையாடுக
**(07 புள்ளிகள்)**

இ. நீங்கள் ஒரு நாடகமும் அரங்கியலும் அல்லது விஞ்ஞான பாட ஆசிரியர் என்ற வகையில், கட்டிளமைப்பருவ மாணவர்களின் ஆர்வங்களுக்கு அமைவாக, எவ்வாறு கற்றல் கற்பித்தல் செயன்முறையினைத் திட்டமிடுவீர்கள் என **இரண்டு (02)** உதாரணங்களுடன் விளக்குக.
**(10 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -